

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 326 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 23 – செவ்வாய்க்கிழமை 07 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 326 : Thiruvalluvar Year - 2057 - Aani 23 - Tuesday 07 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### எதையும் கண்டுகொள்ளாத அரசாக த.வெ.க. அரசு இருக்கிறது! தமிழ்நாட்டை –

# தற்போதைய அரசியல் பேரிடரிலிருந்து தி.மு.க. மீட்டெடுக்கும்!

## துறைமுகம் காஜா இல்ல மணவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 7-**

**தி.மு.க. தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா இல்ல மணவிழாவை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். 'தமிழ்நாட்டை தற்போதைய அரசியல் பேரிடரிலிருந்து தி.மு.கழகம் மீட்டெடுக்கும்" என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.**

மணவிழாவில் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசியது வருமாறு:-

இன்று கழகத்தின் தலைமை நிலையச் செயலாளரும், நம் அருமை அண்ணன் துறைமுகம் காஜா அவர்களின் பேத்தி சமீனா சப்ரியத் ஹனீஃப் கான் அவர்களின் திருமண விழாவில் பங்கேற்று, உங்களோடு சேர்ந்து மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் நம் அத்தனை பேரின் சார்பாக மணமக்களுக்கு நம் வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குடும்பத்தில் ஒருவன்

இந்த விழாவில், வெறும் விருந்தினராக மட்டுமல்லாமல் துறைமுகம் காஜா அவர்களின் குடும்பத்தில் ஒருவனாக, நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த பெருமை அடைகிறேன். நம் கழகத் தலைவர் அவர்கள் இந்த திருமண விழாவைத் தலைமையேற்று நடத்தி வைப்பதாக இருந்தது. இன்றைக்குக் கழகத் தலைவரின் சார்பாக நாங்கள் இந்தத் திருமண விழாவில் கலந்து கொண்டிருக்கிறோம்.

தலைவர் அவர்கள் இங்கே இல்லை என்றாலும், அவர் நினைவு முழுவதும் இந்தத் திருமண விழாவில் நிச்சயம் இருக்கும். தலைவரின் வாழ்த்துகளும் நிச்சயம் இந்த மணமக்களுக்கு உண்டு.

இன்றைக்கு மணமகளாக இருக்கக்கூடிய தங்கை சமீனா சப்ரியத், அவர்களின் தாயார் ஜமீல் பாத்திமாவின் திருமணத்தை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2000வது ஆண்டில், தலைவர் அவர்கள்தான் தலைமையேற்று நடத்தி வைத்தார்கள். இன்றைக்கு நம் காஜா அண்ணனின் பேத்தியின் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.




### அறிவாலயத்தின் தூண்கள்

நம் கழகத்தின் தலைமை நிலையம், அண்ணா அறிவாலயத்துக்குள் யார் நுழைய வேண்டும் என்றாலும், யார் உள்ளே வர வேண்டும் என்றாலும் அவர்கள் முதலில் இரண்டு பேரின் அனுமதியை வாங்க வேண்டும். ஒன்று அண்ணன் பூச்சி முருகன் அவர்கள், இன்னொன்று நம் துறைமுகம் காஜா அவர்கள். இவர்கள் இரண்டு பேரும் நினைத்தால் மட்டும்தான் அண்ணா அறிவாலயத்துக்குள் யாராக இருந்தாலும் நுழைய முடியும். அதனால்தான் நம் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார், அண்ணன் துறைமுகம் காஜா அவர்களும், அண்ணன் பூச்சி முருகன் அவர்களும் அண்ணா அறிவாலயத்தின் இரண்டு தூண்கள் என்று பெருமையோடு குறிப்பிடுவார்.

இன்னொரு முக்கியமான விஷயம், 1989இல் துறைமுகம் தொகுதியில் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எதிர்த்து நின்ற வேட்பாளர் யாரென்று பார்த்தீர்களென்றால், அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள்தான். அண்ணன் அவர்கள் அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, கலைஞர் அவர்களை எதிர்த்துப் போட்டி போட்டார். ஆனால், தேர்தலில் கலைஞர் அவர்கள்தான் வெற்றி பெற்றார்கள்.

வாக்கு எண்ணிக்கை முடிவுறும் நேரத்தில், இன்னும் சொல்லப்போனால் வாக்கு எண்ணிக்கையே முடியவில்லை, அந்த நேரத்தில் போட்டியாக நின்ற அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள், கலைஞருக்கு மாலை போட வேண்டும் என்று சொல்லி, எதிர்க்கட்சி வேட்பாளராக இருந்த அவர் அப்பொழுதே கலைஞரை பார்த்து வாழ்த்துச் சொல்லி மாலை போட்டார். அதன் பிறகு கழகத்திலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

### அண்ணன் துறைமுகம் காஜா

அன்றைக்குத் தொடங்கி இன்றைக்கு வரைக்கும் கிட்டத்தட்ட 37 ஆண்டுகள் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, கழகத்தின் உண்மையான உடன்பிறப்பாக இன்றைக்கு அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள் சிறப்பாகக் கழகப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்.

கலைஞர் அவர்களால் 2003ஆம் ஆண்டு தலைமை நிலையச் செயலாளராக நியமிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 23 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அறிவாலயத்தில் மட்டுமல்ல, நம் கழக மாநாடுகள், நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அங்கே முதலில் இருக்கக்கூடிய நபர் அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள். எங்கு சென்றாலும், எந்தக் கழக நிகழ்ச்சிக்கு சென்றாலும் முதல் ஆளாக நம் உடன்பிறப்புகள் பார்க்கக்கூடிய நபர் அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள்.

> **“ கலைஞர் அவர்களால் 2003ஆம் ஆண்டு தலைமை நிலையச் செயலாளராக நியமிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 23 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அறிவாலயத்தில் மட்டுமல்ல, நம் கழக மாநாடுகள், நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அங்கே முதலில் இருக்கக்கூடிய நபர் அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள். எங்கு சென்றாலும், எந்தக் கழக நிகழ்ச்சிக்கு சென்றாலும் முதல் ஆளாக நம் உடன்பிறப்புகள் பார்க்கக்கூடிய நபர் அண்ணன் துறைமுகம் காஜா அவர்கள். ”**

**தொடர்ச்சி 2ஆம் பக்கம்**

---

### திருப்பரங்குன்றம் மலை மீது ஒன்றிய அரசு அதிகாரிகள் ஆய்வு!

## தமிழ்நாட்டில் நடப்பது த.வெ.க.ஆட்சியா? அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா?

### முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, ஜூலை 7-

திருப்பரங்குன்றம் மலை மீது ஒன்றிய அரசு அதிகாரி ஆய்வு நடத்த தமிழக அரசு அனுமதி என்று தொடர்ந்து தமிழக மக்களை வஞ்சிக்கும் இந்த த.வெ.க. அரசு தமிழ்நாட்டின் உரிமைகளையும் பெருமைகளையும் 55 நாட்களில் பறிகொடுத்து நிற்கிறது. தமிழ்நாட்டில் நடப்பது த.வெ.க. ஆட்சியா? அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா? தமிழக மக்கள் தெளிவு பெறுவார்களா? என முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளபதிவில் கூறியிருப்பதாவது:-



தமிழ்நாடு முதலமைச்சர் பதவியில் இருந்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விலகி 55 நாட்களில் தமிழக மக்கள் இழந்த உரிமைகளும், பெருமைகளும் ஏராளம். ஆளுநரின் அதிரடி ஆய்வு, கன்னியாகுமரி மாவட்ட கடலோர மீனவ கிராமத்தில் அணு கனிம சுரங்க அனுமதி நீட்டிப்பு. தலைவர் கலைஞர் அவர்களால் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்ட 3.5 சதவீத இட ஒதுக்கீடு நீதிமன்றம் மூலம் பறிப்பு. பக்ரீத் பண்டிகையின் போது பொது இடத்தில் தொழுகை நடத்தவும், பலியிடவும் நீதிமன்ற தடை, சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களில் உரிமையை பறிக்கும் வெளிநாட்டு நிதி உதவி ஒழுங்கு படுத்தும் சட்டம் (FCRA) கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இஸ்லாமிய தொழுகை கூடங்கள் கட்ட ஒரு மாதத்திற்குள் அனுமதி வழங்கும் சட்டத்திற்கு நீதிமன்றத் தடை (உதாரணம் கோவை CSI தேவாலயம் கட்ட தடை).

திருப்பரங்குன்றம் மலை மீது ஒன்றிய அரசு அதிகாரிகள் ஆய்வு நடத்த தமிழக அரசு அனுமதி என்று தொடர்ந்து தமிழக மக்களை வஞ்சிக்கும் இந்த த.வெ.க. அரசை தாங்கிப் பிடிக்கும் காங்கிரஸ் இதனை ஏற்கிறதா? தம்பி திருமாவளவன் ஆதரிக்கிறாரா? இடதுசாரி தோழர்கள் அங்கீகரிக்கிறார்களா? IUML தலைவர்கள் சம்மதிக்கிறார்களா? தலைவர் கலைஞர் அவர்களாலும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களாலும் பல பதவிகளை பெற்ற வைகோ இதனை பார்த்து மன மகிழ்ச்சி கொள்கிறாரா?

தமிழ்நாட்டில் நடப்பது த.வெ.க. ஆட்சியா? அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா? தமிழ்நாட்டின் உரிமைகளையும்,பெருமைகளையும் 55 நாட்களில் பறிகொடுத்து நிற்கும் தமிழக மக்கள் தெளிவு பெறுவார்களா? த.வெ.க.வின் தோழமைக் கட்சிகளே தமிழக மக்களின் நலன் குறித்து இனியாவது சிந்திப்பீர்களா? அல்லது தொடர்ந்து இந்த அரசுக்கு இன்னமும் முட்டுக் கொடுக்கப் போகிறீர்களா?

இவ்வாறு முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளார்.


---

### மழைக்கால கூட்டத்தொடர்;

## நாடாளுமன்றம் வரும் 20ம் தேதி கூடுகிறது !

*புதுடெல்லி, ஜூலை 7-*

*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெறுகிறது. மொத்தம் 19 அமர்வுகள் நடைபெற உள்ள இந்தக் கூட்டத் தொடரில், அரசியலமைப்புத் திருத்தம் தேவைப்படும் பல முக்கிய மசோதாக்களை ஒன்றிய அரசு தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளதால், நாடாளுமன்றத்தில் கடும் விவாதங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.*



*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் ஆண்டுதோறும் ஜூலை 3வது வாரம் தொடங்கப்படுவது வழக்கம். இந்நிலையில், நடப்பாண்டிற்கான மழைக்கால கூட்டத் தொடர் தேதியை ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிவித்தார்.*

*அவர் தனது எக்ஸ் பதிவில், “ஒன்றிய அரசின் பரிந்துரையை ஏற்று குடியரசுத் தலைவர் முர்மு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்ட ஒப்புதல் அளித்துள்ளார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து அர்த்தமுள்ள விவாதங்களும் முக்கிய முடிவுகளும் எடுக்க வரும் 20ம் தேதி முதல் ஆகஸ்ட் 13ம் தேதி வரை மழைக் கால கூட்டத்தொடர் நடைபெறும்” என தெரிவித்துள்ளார்.*

*இக்கூட்டத்தொடரில் 25 நாளில் 19 அமர்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அரசியலமைப்பு திருத்தம் தேவைப்படும் பல முக்கிய மசோதாக்களை ஒன்றிய அரசு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.*